**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்: நாராயணசாமி**

**தேதி: 30.09.2025 நேரம்: மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

இன்று, துர்கா பூஜை திருநாளை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தேசிய கல்விக் கொள்கை மூலமாக, நாட்டில் நவீனமான, அனைவரையும் உள்ளடக்கிய, எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற, கல்விக் கட்டமைப்பு ஒன்றை அரசு உருவாக்கி வருகிறது.

கட்டுமான பொருட்கள் மீது அரசு அறிவித்துள்ள வரிக் குறைப்பு, சாதாரண மக்கள் மீதான வரிச் சுமையை குறைப்பதில் முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளது.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர், மாநில மக்களுக்கு சரஸ்வதி பூஜை, மற்றும், ஆயுத பூஜை வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

---------------------------

*வாழ்த்து – நாடு (15)*

இன்று, துர்கா பூஜை திருநாளை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். நாட்டின் கலாச்சாரம், மற்றும், ஆன்மீகப் பாரம்பரியத்தின் சின்னமே துர்கா பூஜை திருநாள் என்றும், துர்கா

தேவியை 9 வடிவங்களில் வழிபடுவது, உண்மை, கருணை, மற்றும், நீதியின் பாதையில் அனைவரையும் இட்டுச் செல்லும் என்றும், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். அன்பு, சமத்துவம், மற்றும் சகிப்புத் தன்மையை ஊக்குவிக்கும் பண்டிகையான துர்கா பூஜை திருநாளில், குறிப்பாக பெண்களுக்கு சமூகத்தில் உரிய இடம் பெற்றுத்தர அனைவரும் உறுதியேற்போமாக என்று அவர் கூறியுள்ளார். புனிதமான துர்கா பூஜை திருநாள், அனைவரின் வாழ்விலும், மகிழ்ச்சி, அமைதி, மற்றும் ஆரோக்கியத்தை கொண்டு வந்து சேர்க்கட்டும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்டவர்களும், துர்கா பூஜை வாழ்த்து தெரிவித்து செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

----------------------------

மோடி RSS (7)

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், RSS பொன் விழா கொண்டாட்டங்களில் கலந்து கொள்கிறார். ஆர்எஸ்எஸ் அமைப்பின் பாரம்பரியம், மற்றும், கலாச்சார பங்களிப்புகளையும், தேச ஒற்றுமையை வலுப்படுத்துவதில் RSS அமைப்பின் பங்கு பணிகளையும் வெளிப்படுத்தும் வகையில், இக்கொண்டாட்டங்கள் அமைய உள்ளன. பிரதமர் திரு. நரேந்திர மோடி இவ்விழாவின் போது, நாட்டிற்கான RSS அமைப்பின் பங்களிப்புகளை

வெளிப்படுத்தும் வகையிலான நினைவு தபால் தலை ஒன்றையும் வெளியிட இருக்கிறார்.

----------------------------

*சேவா சப்தாஹ்- கல்விக் கொள்கை 1 (7)*

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, **மக்கள் சேவை-நல்லாட்சி** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர, அயராது உழைத்து வருகிறது. 2020ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கை மூலமாக, நாட்டில் நவீனமான, அனைவரையும் உள்ளடக்கிய, எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற, கல்விக் கட்டமைப்பு ஒன்றை அரசு உருவாக்கி வருவது குறித்து, இன்று, **சேவைத் திருவிழா** என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம். ……….

**(வாய்ஸ்)**

*சேவா சப்தாஹ்- கல்விக் கொள்கை 2 (10)*

கல்விதான், நாட்டின் எதிர்காலத்தையும், அடுத்தடுத்த தலைமுறைகளின் வாழ்க்கைச் சூழலையும் தீர்மானிக்கும் அடிப்படை. இதை கருத்தில் கொண்டே, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, 2020ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்தியது. 34 ஆண்டு இடைவெளிக்கு பின்னர், முதல் முறையாக அறிவிக்கப் பட்டுள்ள, இப்புதிய கல்விக் கொள்கையில், 21ஆம் நூற்றாண்டின் தேவைகளுக்கு ஏற்ப, இந்திய கல்வி முறையை மாற்றி அமைக்கும் வகையில், பல்வேறு முக்கிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. அனைவருக்கும் சமமான கல்வி வாய்ப்புகளை

வழங்குவதே, தேசிய கல்விக் கொள்கையின் நோக்கம் என்று, பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

(வாய்ஸ்-மோடி)

சேவா சப்தாஹ்- கல்விக் கொள்கை 3 (13)

2020ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கையில், வழக்கமான பள்ளிக் கல்வி, மற்றும், உயர்க் கல்வியில், நடைமுறை ரீதியிலான தொழில் திறன்களை ஒருங்கிணைத்து, மாணவர்களின் திறன் மேம்பாட்டை உறுதிப்படுத்த மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. நடுநிலைக் கல்வி, மற்றும், இடைநிலைக் கல்வியிலேயே தொழில் கல்வியை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்த, இக்கொள்கை அழைப்பு விடுக்கிறது. பன்மொழி அணுகுமுறையை ஊக்குவிக்கவும், குறிப்பாக இந்திய மொழிகளை துடிப்பான வைத்திருக்கும் முயற்சிகளை தூண்டவும், தேசிய கல்விக் கொள்கையில் முக்கிய கவனம் செலுத்தப் படுகிறது. அடிப்படை எழுத்தறிவு, மற்றும் எண்ணறிவை அனைவருக்கும் வழங்கவும், பள்ளிகளில், பாடத் திட்டத்தின் அடிப்படையிலான கல்வி, பாடத் திட்டம் அல்லாத செயல்பாடுகள் மூலமான கல்வி, மற்றும், தொழிற் கல்விக்கு இடையிலான வித்தியாசத்தை போக்கவும், தேசிய கல்விக் கொள்கையில் முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது.

சேவா சப்தாஹ்- கல்விக் கொள்கை 4 (8)

நாட்டில் அனைவரையும் உள்ளடக்கிய, கற்போரை மையமாக கொண்ட, எதிர்கால தேவைகளுக்கு ஏற்ற, கல்வி முறை ஒன்றை கொண்டு வர, தேசிய கல்விக் கொள்கை கடந்த 5 ஆண்டுகளில், வலுவான அடித்தளம்

ஒன்றை அமைத்துள்ளது. ஒவ்வொரு மாணவருக்கும், கல்வி அறிவுக்கு அப்பாற்பட்டு, நம்பிக்கை, ஆர்வம், மற்றும் திறன்களையும் வழங்கக் கூடிய கல்வி முறை ஒன்றை, வலுவான குறிக்கோள், மற்றும் ஒத்துழைப்பான முயற்சிகள் மூலம், உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை, தேசிய கல்விக் கொள்கை வலுப்படுத்தி இருப்பதில் ஐயமில்லை.

---------------------------

*ஜிஎஸ்டி-கட்டிட பொருள் 1 (7)*

நாட்டில் தற்போது அமலாகி வரும், அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், மறைமுக வரிக் கட்டமைப்பை எளிமைப் படுத்துவதில், முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளன. இதுவரை 4 அடுக்குகளாக இருந்த ஜிஎஸ்டி கட்டமைப்பு, 5 சதவிகிதம், 18 சதவிகிதம் என, 2 அடுக்குகளாக குறைக்கப் பட்டுள்ளது. பல்வேறு பொருட்கள், மற்றும் சேவைகள் மீதான வரிக் குறைப்பினால், மக்கள் மீதான வரிச் சுமை கணிசமாக குறைந்துள்ளது. கட்டுமானப் பொருட்கள் மீதான வரிக் குறைப்பு குறித்து, ஒரு செய்தி தொகுப்பு....

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி-கட்டிட பொருள் 2 (15)*

**(வாய்ஸ்)**

சிமெண்ட், பளிங்குக் கல் உள்ளிட்ட கட்டுமான பொருட்கள் மீது அரசு அறிவித்துள்ள வரிக் குறைப்பு, சாதாரண மக்கள் மீதான வரிச் சுமையை குறைப்பதில் முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், கிரானைட், மற்றும் பளிங்குக் கற்கள் மீதான

12 சதவிகித ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. இதனால் கட்டுமானச் செலவு குறைவதுடன், வீட்டு வசதி, மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களின் மொத்த செலவும், கணிசமாக குறையும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இதுபோலவே. சிமெண்ட் மீதான 28 சதவிகித வரியும், தற்போது 18 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. இதுஅல்லாது, ஒப்பந்த அடிப்படையிலான செங்கல் தயாரிப்புப் பணிகள் மீதான 12 சதவிகித வரியும், 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், குறிப்பாக, கிராமப்புறங்களில், வீடு கட்டும் செலவு குறைவதுடன், செங்கற் சூளைகளை நடத்தும் சிறு-குறு-நடுத்தர தொழில் முனைவோர் பயன் பெறுகிறார்கள். கட்டுமானப் பணிகள் ஊக்கம் பெறுவதால், கட்டுமானம், மற்றும், தொடர்புடைய துறைகளில், வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் என்பதையும் நிபுணர்கள் சுட்டிக் காட்டி

ஜிஎஸ்டி-கட்டிட பொருள் 2 (5)

உள்ளனர். வீடு கட்டுவோSர், கட்டுமான பொருட்களின் உற்பத்தியாளர்கள், கட்டுமான தொழிலாளர்கள் உட்பட, அனைத்துத் தரப்பினரும் வரிக் குறைப்பினால் பயன்பெறுவதால், மொத்தத்தில் பொருளாதாரம் ஊக்கம் பெறும் என்பதும், பளிங்குக் கல் உள்ளிட்ட கட்டுமான பொருட்களின் இறக்குமதி குறைந்து, உள்ளூர் அளவிலான போட்டித் திறன் அதிகரிக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---------------------------

*வாழ்த்து புதுவை (20)*

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர், மாநில மக்களுக்கு சரஸ்வதி பூஜை, மற்றும், ஆயுத

பூஜை வாழ்த்து தெரிவித்துள்ளனர். நமது பண்பாட்டிலும், வாழ்விலும், கல்விக்கும்-தொழிலுக்கும் நாம் அளிக்கும் முக்கியத்துவத்தை கொண்டாடும் தருணம் இது என்று, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் தமது வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார். தொழிலையும், தொழில் கருவிகளையும், போற்றி வணங்கும் இவ்விழா, அனைவரின் வாழ்விலும், மகிழ்ச்சி, நம்பிக்கை, மற்றும், ஒற்றுமை உணர்வை வலுப்படுத்த தாம் வேண்டுவதாக, அவர் தெரிவித்துள்ளார். இளைஞர்கள் தங்களின் அறிவு, திறமை, மற்றும் உழைப்பு மூலம், நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிக்க வேண்டும் என்றும், துணை நிலை ஆளுநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

முதலமைச்சர் திரு. ரங்கசாமி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளிலும் தெய்வீகத் தன்மை இருப்பதை உணர்த்தும் நாள் இது என்று கூறியுள்ளார். நம்மைச் சுற்றி உள்ள அனைத்திலும் தெய்வீக இருப்பை நாம் உணர்வதால், நமது இல்லங்களிலும்,பணியிடங்களிலும், நேர்மறை ஆற்றல் நிறைந்த சூழல் உருவாகும் என்று அவர் தெரிவித்துள்ளார். ஆயுத பூஜை, மற்றும் சரஸ்வதி பூஜை திருநாள், அனைத்து குடும்பங்களிலும் மகிழ்ச்சி, மற்றும் வளத்தையும், அனைவரின் வாழ்வில் புதிய நம்பிக்கை மற்றும் ஆற்றலையும் கொண்டு வந்து சேர்க்கட்டும் என்று, முதலமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

---------------------------

தமிழ்நாடு கைது (13)

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் குறித்து பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி ஹேமாமாலினி தலைமையில், தேசிய ஜனநாயகக்

கூட்டணி சார்பில் அனுப்பி வைக்கப் பட்டுள்ள உண்மை அறியும் குழுவினர் இன்று கரூரில், சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர், மற்றும், காயமடைந்தவர்களை நேரில் சந்தித்து, விவரம் சேகரித்தனர். குழுவின் அறிக்கை, பிஜேபி தலைவர் திரு. ஜே.பி நட்டாவிடம் சமர்ப்பிக்கப்படும் என, குழுவில் மூத்த உறுப்பினராக இடம்பெற்றுள்ள முன்னாள் மத்திய அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் தெரிவித்தார். முன்னதாக, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி ஹேமமாலினி பயணம் செய்த கார்,இன்று சிறு விபத்துக்குள்ளான போதிலும், ஹேமமாலினி காயமின்றி தப்பினார். இதற்கிடையே, கரூர் சம்பவம் தொடர்பாக, தமிழக வெற்றிக் கழகத்தின் 2 நிர்வாகிகளை, போலீசார் நேரில் அழைத்து விசாரித்த பின்னர், கைது செய்துள்ளனர். சம்பவம் குறித்து பொய்ச் செய்திகளை பரப்பியதற்காக You-Tuber ஒருவரும் கைது செய்யப் பட்டுள்ளார்.

---------------------------

வானிலை (10)

மத்திய வங்கக் கடல் பகுதியில் நாளை, காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என்றும், இது வரும் அக்டோபர் 2ஆம் தேதி, காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, அக்டோபர் 3ஆம் தேதி காலை வாக்கில், தெற்கு ஒடிசா, மற்றும், வடக்கு ஆந்திரக் கரையை கடக்கக் கூடும் என்றும் எதிர்ப்பார்க்கப் படுகிறது. வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக இன்று, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம்

தெரிவித்துள்ளது. திருவள்ளூர்-ராணிப்பேட்டை மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*விளையாட்டு* (8)

மத்திய இளைஞர் விவகாரங்கள், மற்றும், விளையாட்டுத் துறை அமைச்சகம், 2025ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விருதுகளுக்கு, விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது. மேஜர் தியான்சந்த் கேல் ரத்னா விருது, அர்ஜுனா விருது, துரோணாச்சார்யா விருது, மற்றும், ராஷ்ட்ரீய கேல் புரோத்சாகன் விருதுக்கு தகுதியுள்ள விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், மற்றும் நிறுவனங்கள், இதற்கான அதிகாரப்பூர்வ இணைய தளம் மூலம், அடுத்த மாதம் 28ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*ராஜ்நாத் சிங் (13)*

நடப்பு 21ஆம் நூற்றாண்டில், நாட்டின் பாதுகாப்பிற்கு எதிரான அச்சுறுத்தல்கள் சிக்கலாகி வருவதால், முப்படைகளும் ஒருங்கிணைந்து செயல்படுதல், காலத்தின் கட்டாயம் என்று, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். இதுகுறித்து, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, முப்படை கருத்தரங்கில் அவர் பேசுகையில், நிலம், நீர், மற்றும், வான்வழித் தாக்குதலுக்கு அப்பாற்பட்டு, சைபர் தாக்குதல்களையும் சமாளிக்க வேண்டிய நிலை, தற்போது உருவாகி இருப்பதை சுட்டிக் காட்டினார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, இந்திய விமானப் படையின் ஒருங்கிணைந்து

வான் கட்டுப்பாட்டு கட்டமைப்பும், ராணுவத்தின் அகாஷ்தீர், மற்றும், கப்பற்படையின் திரிகுண் வசதியும் இணைந்து செயல்பட்டதே, வெற்றிக்கு காரணம் என்று திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார். இதேபோல் சைபர் போர் முறைகளை கையாளுவதிலும், முப்படைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இன்று, துர்கா பூஜை திருநாளை ஒட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தேசிய கல்விக் கொள்கை மூலமாக, நாட்டில் நவீனமான, அனைவரையும் உள்ளடக்கிய, எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற, கல்விக் கட்டமைப்பு ஒன்றை அரசு உருவாக்கி வருகிறது.

கட்டுமான பொருட்கள் மீது அரசு அறிவித்துள்ள வரிக் குறைப்பு, சாதாரண மக்கள் மீதான வரிச் சுமையை குறைப்பதில் முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளது.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர், மாநில மக்களுக்கு சரஸ்வதி பூஜை, மற்றும், ஆயுத பூஜை வாழ்த்து தெரிவித்துள்ளனர்.